1990 சனவரி 20]

9–40 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற முகப்பு விளக்குகள் இரண்டு பக்கமும்தான் இருக்கின்றன. ஒருவேளை ஒரு பக்கம் லைட்டு மட்டுமே எரிந்து கொண்டு வருவதனால் கூட விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இரண்டாவதாக அதிகப்படியான வெளிச்சங்களைக் கொண்ட விளக்குகள் பொருத்தப்படுகிற காரணத்தால் அவற்றிற்கு பாதி அளவில் மேற்புறத்தில் கருப்பு வர்ணம் கட்டாயமாக அடிக்கப்பட வேண்டுமென்ற விதிமுறைகள் உள்ளன. இவற்றை எல்லாம் தீவிரமாகச் செயல்படுத்த காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சமூக விரோத சக்திகளோடு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய அதிகாரிகள் துணையாக இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அப்படி என்றால் கடந்த ஆண்டில் யார் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக விரோத சக்திகள் எந்த உருவிலே வந்தாலும் அவர்களை அடியோடு களைந்து எறிவதற்கு அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நீண்ட தொலைவு இடங்களுக்கு எல்லாம் மாற்று டிரைவர்களை அனுப்புவதாகச் சொன்னார்கள். ஆனால் 450 கிலோ மீட்டர் தூரம் உள்ள பேராவூரணிக்கு ஒரு டிரைவர்தான் சென்று கொண்டிருக்கிறார். அது போன்று தொலைவான இடங்களுக்கு எல்லாம் மாற்று டிரைவர்கள் மிக மிக அவசியம் என்பதை மறு பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யலாம்.

நரிக்குறவர்களுக்கு கடன் உதவி.

* *1344.* திருமதி பாப்பா உமாநாத்:

மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நரிக்குறவர்களுக்கு பாசிமணி வியாபாரம் செய்ய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் உதவி செய்ய ஏதேனும் திட்டம் உள்ளதா?

[1990 சனவரி 20

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு தரப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் வங்கிக் கடன் மற்றும் அரசு மான்யமும் வழங்கப்படுகின்றன.

(ஆ) தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் வங்கிக் கடன் மற்றும் அரசு மானியமாக சேர்த்து மொத்தம் 3,619 நரிக் குறவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நரிக்குறவர்கள் ஏறத் தாழ 400 பேர்களே இருந்த போதிலும் கூட ஆயிரம், இரண் டாயிரம் பேர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதிலேயும் பல மோசடிகளும் முறைகேடுகளும் நடைபெற்றன என்பது குறித்து 6 மாதத்திற்கு முன்னதாகவே நான் தகவல் கொடுத்திருந்தேன். புகார்கள் பண்ணியிருந்தேன். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுத்தார்களா என்று தெரியவில்லை. பல ஊர்களிலிருந்து நரிக்குறவர்களைத் திருச்சிக்கு கொண்டு வந்து, பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்கள் இது போன்ற வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மானியமாகக் கொடுக்கப் படும் 2,000 ரூபாயை இந்த அலுவலர்களே எடுத்துக் கொண்டு பாக்கித் தொகையை அவர்களுக்குக் கொடுப்பதாக புகார்கள் வந்திருக்கின்றன. அதை உடனடியாக கவனித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நரிக்குறவர் களுக்கு பாசிமணி வியாபாரம் செய்ய ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கடன் உதவி செய்ய ஏதேனும் திட்டம் உள்ளதா என்பது தான். அதற்குரிய பதிலை நான் ஏற்கனவே சொன்னேன். திருச்சியில் 1,508 பேர்களுக்கு 82,69,000 ரூபாய் கடன் வழங்கப் பட்டிருக்கிறது. மானியம் 27,56,337 ரூபாய் வழங்கப்பட்டிருக் கிறது. இதுபற்றி புகார்கள் தற்போது ஏதேனும் வந்தால் நான் அது பற்றி உரிய நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக் கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கிட்டத் தட்ட 300 நரிக்குறவர் குடும்பங்கள் இருக்கின்றன. அவர் களுக்கு 3 லட்சம் ரூபாய் வங்கியிலிருந்து கடனாகத் தந்திருக் கிறார்கள். அவர்களும் அதை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தி வருகிறார்கள். அவர்கள் தற்போது நிரந்தரமாக தங்க வீடுகள் அமைத்துக் கொடுக்குமாறு கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

1990 சனவரி 20]

ஆகவே அரிசனங்களாக அவர்களையும் கருதிக் கொண்டு தாட்கோ மூலமாக வீடு கட்டித் தரும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கடன் கொடுப்பது பற்றியது. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

குற்றாலம் நகரியக் குழு.

***2514.** திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குற்றாலம் நகரியக் குழு அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

30–10–1987 நாளிட்ட ந. நி. ம. கு. வ. துறை, அரசாணை நிலை எண் 1045-ல் 12 அலுவலர்கள் மற்றும் 6 அலுவலரல்லாதவர் ஆகியோரை உறுப்பினர்களாக மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் செய்து குற்றால நகரியக் குழு அமைக்கப்பட்டது. அலுவலரல்லாத உறுப்பினர்களின் நியமனத்தை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இடைக்காலத் தடை உத்தரவு பெறப்பட்டதால், அவர்கள் இதுவரை பதவி ஏற்கவில்லை. இதற்கிடையில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவை திரும்பப் பெற்றுக் கொண்டு, புதிதாக உறுப்பினர்களை நியமனம் செய்ய இயலுமா என்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

9-45 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் இந்தத் துறையின் அமைச்சராக இருந்தபோது கூட நான் இதை வலியுறுத்தி வந்தேன். இனி மேல் நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு பிரயோசனம் இல்லை. புதிய குழுவை நியமனம் செய்ய வேண்டும் என்றுதான் அந்த வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஆகவே அதை உடனடியாகப் போட வேண்டும். 3, 4 வருடங்களாக குற்றாலம் நகரியம் இல்லாமல் தமிழ் நாட்டினுடைய ஒரு மிகப்பெரிய சுற்றுலா ஸ்தலம் ஒருவிதமான சீரமைப்புப் பணிகளும் இல்லாமல் நடந்து வருகிறது. ஆகவே அதை ஒரு காலவரம்பிற்கு உட்பட்டாவது அமைக்க முடியும் என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு தருவார்களா என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன்.